**Anode Fabricators Pvt Ltd**
*Innovation In Inert Metals*

**MMO, Platinized Ti & Nb Anodes** — Ti Nb Ir Ta Ru Pt

## Inter-Organizational News Letter – July 05

### கண்ணீர் அஞ்சலி

தோற்றம்:
08.11.1980



மறைவு:
04.06.2005

### FORECASTING 05-06

| | |
|---|---|
| Turnover | : 125% ↑ |
| Employment | : 25% ↑ |
| Profitability | : 100% ↑ |
| Modernization | : in coating Plant → |
| Rejection growth | : 100% ↓ |

### TESTIMONIALS

- **Customers:**

Up to April 05 : 130 Nos
Up to May 05 : 137 Nos

- **Performance: May-05**

Turnover growth : 12.61%
Employment growth: 1.61%↑
100% Attendance : 39.68%


### MANAGEMENT

Ms. P.E. Nancy – Director
Mrs. J. Vanajambika – Director

### KEY PERSONS

| | |
|---|---|
| M.P.V. Jaykumar | - CEO. |
| M. Suyampu | - Finance. |
| T. Saravanan | - QA & M |
| T. Ramesh | - Stores & Purchase. |
| T. Amaladhas | - Plating. |
| N. Murugan | - Production. |
| C. Sounder Suresh | - Out Sourcing. |
| RM. Ravi Chandran | - Marketing. |

### ACHIEVEMENT




# நாளை நமது நாளா?

காலை ஐந்து மணிக்கு அலாரம் அடிக்கிறது. எழுந்திருக்க வேண்டியவர் அலாரம் அடிக்கும் கடிகாரத்தை ஓங்கி அடிக்கிறார். கடிகாரம் கப்.. சிப்.. வாய் மூடிக் கொண்டது. உண்மையில் அலாரம் மீது அடி விழவில்லை. அவரது முன்னேற்றம் என்கிற முதுகெலும்பின் மீது விழுந்த அடி அது. படுக்கையை விட்டு எழுகின்ற நேரத்தை அவர் தள்ளி போடவில்லை தமது தோல்வியை விட்டு எழுகின்ற முயற்சியை அவர் தள்ளிப்போட்டிருக்கிறார்.

நாளை நாள் நமது நாளா? நமனது (எமன்) நாளா? யார் அறிவார்?

இரண்டு நண்பர்கள். ஒருவர் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர். மற்றவர் விஞ்ஞானத்தில்... இருவரும் ஒரே கல்லூரியில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தனர். அவரவர் துறைக்கு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு உடனே பணியில் சேர உத்தரவு வந்தது. தமிழ் படித்தவர் "இன்று சனிக்கிழமை... நாள் நன்றாக இல்லை... திங்கட்கிழமை சேருவோம்" என்று ஒரு நாளை (இடையில் உள்ள ஞாயிற்றுக் கிழமையை) ஒத்திவைத்தார். மற்றவரோ சனிக்கிழமையே பணியில் சேர்ந்து விட்டார்.

> ஒரு வேலையை சரியாகச் செய்யக் கற்றுக் கொண்டவர்கள் ஒவ்வொரு வேலையையும் சரியாகத்தான் செய்வார்கள்.
> – குர்ஜி.:.ப்

பல ஆண்டுகளுக்குப் பிறகு கல்லூரி முதல்வர் பணித் தேர்வின்போது விஞ்ஞானப் பேராசிரியர் முதல்வர் ஆனார். மிக முக்கிய காரணம் Seniority... பணிமூப்பு. ஒருநாள் தமிழ் பேராசிரியருக்கு முன்பாகவே சேர்ந்துவிட்டதால் பணிமூப்பு என்ற காரணம் காட்டி முதல்வர் பதவி பெற்றார். பத்தாண்டு காலம் கல்லூரி முதல்வராக இருந்தார். ஒரு நாள் தாமதமாகச் சேர்ந்தவர் கடைசிவரை முதல்வராக முடியாமலேயே பணி ஓய்வு பெற்றார். ஒரு நாள் முன்னாள் சேர்ந்த காரணத்தால் கல்லூரி முதல்வராக பத்தாண்டு இருக்க முடிந்தது. ஒத்தி வைத்த ஒருவரை பதவியும் ஒத்தி வைத்து விட்டது. பரபரப்பும் படபடப்பும் வேண்டாம். ஆனால் ஓயாமல் ஒத்தி வைத்து ஒத்தி வைத்து வாழ்க்கை உங்களை ஒத்தி வைக்க அனுமதிக்கவும் வேண்டாம்.

– சொல் வேந்தர் சுகி சிவம்

## விற்பனை விசித்திரம்.

ஒரு கடிகாரக் கம்பெனிக்கு வெளியூர் வாடிக்கையாளர் ஒருவர் கடிதம் எழுதினார். "எனக்கு நீங்கள் அனுப்பிய கடிகாரத்தின் கண்ணாடி உடைந்திருக்கிறது. திரும்ப அனுப்பவா? சரிசெய்து கொடுங்கள்" என்று. இரண்டே நாட்களில் கம்பெனி பதில் எழுதியது. "உங்கள் ஊரிலேயே அதை நீங்கள் சரி செய்து கொள்ளலாம். இருபது ரூபாய்தான் செலவாகும். அதற்காக உங்களுக்கு இருபத்தைந்து ரூபாய் பணம் இத்துடன் அனுப்பியிருக்கிறோம்" என்று. வாடிக்கையாளர் – நிறுவனம், இருவருக்குமே செலவும் மிச்சம்! நேரமும் மிச்சம்!

... 2

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. United Bank of India |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : 1] Lr. V. Benedict Vincent.<br>2] Lr. M.K. Govindan. |

## ADVISE CORNER

### தடுமாற்றம் வரும்போது...

சிறியதாய் இருக்கையிலே சரிசெய்யப் பாருங்கள்!
முழுதாய்ப் புரிந்தவர்கள் யோசனையைக் கேளுங்கள்!
சேர்ந்து பணி செய்வோர் சொல்வதையும் கேளுங்கள்!
யாருக்கு என்ன பணி வரையறுத்துக் கூறுங்கள்!

## TI CLUB

'ஒரு நம்பிக்கை; நமக்குத் தொணையா நூறு பேரு இருக்காகன்னு ஒரு தெகிரியம்; மத்த ஆளுக மத்தியில ஒரு மருவாதி; மூஞ்சிக்கு நேர கேவலமா சாதி பேசாத ஒரு கவுரவம்; நாலு மக்க மனுச பழக்கம்; சில்லறை சில்லறையா கடன் அடைஞ்சி வர்ற சந்தோசம்; எல்லாத்துக்கும் மேலா ஒத்துமை'.

## உங்கள் பக்கம்

### சுனாமி!

அன்று!
அன்பிற்கு மனிதன்
பொறுமைக்கு நிலம்
பெருமைக்கு கடல்
இன்றோ!
ஒரு பக்கம் திரும்பினால் கொலை
மனித நேயம் என்பதே இல்லை!
மறு பக்கம் திரும்பினால் திருட்டு
மண்ணுலகம் கண்டது இருட்டு!
மனித ஆசையின் எல்லை
அதோடு நிற்க வில்லை!
நிலத்தைச் சுரண்டினான்
கடலை சூரையாடினான்!
நிலம் பூகம்பமாய் வெடித்தது
கடலும் தன் பங்கிற்கு அள்ளியது!
எதற்கும் கொடுக்கும் விலை
இவற்றிடம் செல்ல வில்லை!

– C. Lakshmipathy
Production

## BIRTH DAY WISHES



| | | |
|---|---|---|
| Master S. Dinesh | - S/o. S. Sasirekha | - July 11 |
| Mr. T. Saravanan | - Manager-QA | - July 19 |
| Master L. Kishore | - S/o. C. Lakshmipathy | - July 19 |
| Mr. M. Christ Deepak | - Logistics | - July 23 |
| Mrs. A. Seethalakshmi | - M/o. A. Nirmala | - July 29 |
| Mr. S. Mathan | - Production | - July 31 |

**Best Wishes by, Staff Members.**

### எங்கள் உள்ளம்!

அன்று,
தென் குமரி தளிர்த்த மொட்டு – இன்று
தென் சென்னை மலர்ந்த ஜெயம்!
பல மலர்களை மணம்வீச செய்யும் – இளம்
பனி மலர்களை ஒளிவீச செய்யும்!
அன்று,
தப்பி, தப்பி நடந்தோம் அன்னையுடனே!
எட்டி, எட்டி வளர்ந்தோம் தந்தையுடனே – இன்று
கற்று, தெற்று தெளிந்தோம் உங்களுடனே – பல
சாதனைகள் படைப்போம் உங்களுடனே!
என்றும்,
பற்று மிக்க பணியாளர்கள்!
பாதுகாக்கும் மேற்பார்வை!
தொட்டு பூசும் மேற்பூச்சு!
தகட்டை தட்டி செல்லும் தரம்!
கொட்டி கொடுத்த தரச்சான்று!
எட்டு திசைக்கும் விற்பனை!
எண்ணற்ற வாடிக்கையாளர்கள்!

எட்டி பிடிக்கும் வானத்தையே! – அதை தினம்
எண்ணிப்பார்க்கும் எங்கள் உள்ளம்!!

– செ. ரஞ்சித்.
Erection & Commissioning

> சிறுகதைகள், துணுக்குகள் கவிதைகள், கட்டுரைகள் பணியாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.
> – Editor

*********

### சிரிப்பும் வரும்! சோகமும் வரும்!!

**சில குழந்தைகள் கடவுளுக்கு ஈமெயில் அனுப்பினர்!**

"கடவுளே! அமெரிக்காவில் ஒரு மாணவன் பள்ளிக் கூடத்துக்குள் நுழைந்து ஒன்றும் தெரியாத மாணவர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றானே! நீ ஏன் அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றவில்லை? இந்தியாவில் கூட ஒரு பள்ளியில் பல நூறு குழந்தைகள் நெருப்பில் இறந்தார்களே? நீ ஏன் அவர்களையும் காப்பாற்றவில்லை?"

**கடவுள் பதில் அனுப்பினார்!**

"என்னை மன்னித்துவிடுங்கள் குழந்தைகளே! உலகம் முழுக்க என்னை யாரும் பள்ளிக் கூடங்களுக்குள் அனுமதிப்பதில்லை இப்பொழுது!!"

### ANNUEL DAY MEETING 2004 – 05

